# ஓய்வுநாள் மற்றும் ஞாயிற்றுக்கிழமை குறித்த 100 ஆச்சரியமான உண்மைகள்!

ஏன் ஓய்வுநாளை ஆசரிக்கவேண்டும்? ஓய்வுநாளின் நோக்கம் என்ன? அது யாரால், யாருக்காக, எப்போது நிறுவப்பட்டது? உண்மையான ஓய்வுநாள் எது? அநேகர் வாரத்தின் முதல் நாளை, அதாவது ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கின்றனர். அதற்கு என்ன வேதாகமச் சான்றை அவர்கள் வைத்திருக்கிறார்கள்? சிலர் ஏழாம் நாளை, அதாவது சனிக்கிழமையை ஆசரிக்கின்றனர். இதற்கு அவர்கள் வைத்துள்ள வேதாகமச் சான்றுகள் என்ன? இரண்டு நாளைக் குறித்தும் வேதாகமத்தில் வெளிப்படையாக கொடுக்கப்பட்டுள்ள சான்றுகள் இதோ உங்களுக்காக:

1. இந்த உலகத்தை உருவாக்குவதில் ஆறுநாளும் வேலை செய்த சர்வவல்மையுள்ள தேவன், ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். (**ஆதி. 2:1, 3**)
2. எனவே, இந்த நாள் தேவனுடைய ஓய்வுநாள் அல்லது ஓய்வுநாள் என்று அதாவது வேலையிலிருந்து ஓய்ந்திருக்கும் நாள் என்று முத்திரையிடப்பட்டது. உதாரணத்திற்கு, ஒருவர் ஒரு குறிப்பிட்ட நாளில் பிறக்கும்போது, அந்த நாள் அவருடைய பிறந்தநாள் என்னப்படுகிறது. அதுபோல, தேவனாகிய கர்த்தர் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்ததால், அந்த நாள் அவருடைய ஓய்வுநாள் என்றென்னப்படுகிறது.
3. ஆகவே, ஏழாம் நாளே எப்போதும் தேவனுடைய ஓய்வுநாளாகும். உங்கள் பிறந்தநாளை நீங்கள் பிறக்காத ஒரு நாளுக்கு மாற்றிக்கொள்ளச்சொன்னால் உங்களால் அதைச் செய்யமுடியுமா? முடியாதல்லவா? அதுபோலவே, தேவன் ஓய்ந்திராக வேறொரு நாளை அவருடைய ஓய்வுநாள் என்றும் உங்களால் கூறமுடியாது. எனவே, ஏழாம் நாளே தேவனுடைய ஓய்வுநாளாக இன்றும் உள்ளது.
4. சிருஷ்டிகர் ஏழாம் நாளை ஆசீர்வதித்தார். (**ஆதி. 2:3**)
5. அவர் ஏழாம் நாளைப் பரிசுத்தமாக்கினார். (**யாத். 20:11**)
6. அவர் ஓய்வுநாளை ஏதேனிலே உருவாக்கி நிறுவினார். (**ஆதி. 2:1-3**)
7. ஓய்வுநாள் விழுகைக்கு முன் உருவாக்கப்பட்டதாகும்; எனவே அது நிழலல்ல; நிழலாட்டமான சடங்காச்சாரங்கள் பாவத்திற்கு முன் கொடுக்கப்படவில்லை.
8. ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது என இயேசு கூறினார் (**மாற்கு 2:27**), அதாவது “மனுஷன்” என்ற வார்த்தை “முழு மனுக்குலத்தையும்” குறிக்கும். எனவே, ஓய்வுநாள் யூதர்களுக்கு மட்டுமல்ல அனைத்துலக மக்களுக்கும் அளிக்கப்பட்டதாகும்.
9. ஓய்வுநாள் சிருஷ்டிப்பின் நினைவுச்சின்னமாகும். (**யாத். 20:11; 31:17**) தேவன் ஏதேனில் ஆசரித்ததுபோல, ஒவ்வொரு ஓய்வுநாளையும் நாம் ஆசரிக்கும்போது, அந்த மாபெரும் நிகழ்வை நினைவுகூறுகிறோம்.
10. மனுக்குலத்தின் பிரதிநிதியான ஆதாமுக்கு ஓய்வுநாள் கொடுக்கப்பட்டது. (**மாற்கு 2:27; ஆதி. 2:1-3**)
11. எனவே, அவர் மூலமாய் மனுக்குலத்தின் அனைத்து அங்கத்தினருக்கும் ஓய்வுநாள் கொடுக்கப்பட்டது. (**அப். 17:26**)
12. ஓய்வுநாள் யூதர்களுக்காக நிறுவப்பட்ட ஓர் சட்டமல்ல. ஏனெனில், 2300 ஆண்டுகளுக்கு முன்னதாகவே எந்த ஒரு யூதனும் இல்லாதிருந்த காலத்திலேயே அது உண்டாக்கப்பட்டு ஆசரிக்கப்பட்டுவந்தது.
13. வேதம் ஒருநாளும் ஓய்வுநாளை யூதர்களுடைய ஓய்வுநாள் என்று அழைத்ததேயில்லை, மாறாக எப்போதும் “தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்” என்றே அழைக்கிறது. எனவே, ஓய்வுநாளை எப்படி முத்திரையிடுகிறோம் என்பதில் மனிதர்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

14. முற்பிதாக்களின் காலங்களிலும் ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்டது என்பதற்கான வேதாகமச் சான்றுகள் உள்ளன.
**(ஆதி. 2:1-3; 8:10, 12; 29:27, 28 மற்றும் பல)**
15. சீனாயில் கொடுக்கப்படுவதற்கு முன்னமே (வார்த்தை வடிவில்) ஓய்வுநாள் தேவனுடைய கற்பனைகளின் ஓர் அங்கமாக இருந்தது. **(யாத். 16:4, 27-29)**
16. பின்னர் தேவனுடைய கற்பனைகளின் இருதயமாகிய மையத்தில் எழுதப்பட்டது **(யாத். 20:1-17)** மாறக்கூடிய ஒரு கற்பனையாக இருக்குமாயின் தேவன் எதற்காக அதை மாறாத பத்து கற்பனைகளின் மையத்தில் எழுதினார்?
17. ஏழாம் நாள் ஓய்வுநாள் கற்பனை, ஜீவனுள்ள தேவனுடைய வாயினால் பேசி கட்டளையாகக் கொடுக்கப்பட்ட கற்பனையாகும். **(உபா. 4:12, 13)**
18. பின் தேவன் தன்னுடைய சொந்த விரலினால் எழுதிகொடுத்த கற்பனையாகும். **(யாத். 31:18)**
19. எதையும் தாங்கும் கற்பலகையில் அவர் எழுதினார். இது அதினுடைய அழியாத்தன்மையை வெளிப்படுத்துகிறது. **(உபா. 5:22)**
20. அது மகா பரிசுத்த ஸ்தலத்தில் பரிசுத்தமான உடன்படிக்கைப்பெட்டிக்குள் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டிருந்தது. **(உபா. 10:1-5)**
21. மிகவும் அவசரமான சூழ்நிலையிலும்கூட தேவன் ஓய்வுநாளில் வேலை செய்வதை தவிர்க்கச்சொன்னார். **(யாத். 34:21)**
22. ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்கியதால், தேவன் இஸ்ரவேலர்களை வனாந்திரத்தில் அழித்துப்போட்டார். **(எசே. 20:12, 13)**
23. மற்ற பொய்யான தெய்வங்களிலிருந்து மெய்யான தேவனை நாம் அறிந்துகொள்வதற்கு ஓய்வுநாள் ஒரு அடையாளமாயிருக்கிறது. **(எசே. 20:20)**
24. யூதர்கள் ஓய்வுநாளை உண்மையாகக் கைக்கொண்டிருப்பார்களேயானால் எருசலேம் ஒருபோதும் அழியாது என தேவன் வாக்குரைத்திருந்தார். **(எரே. 17:24, 25)**
25. ஓய்வுநாள் கட்டளையை மீறியதினாலேயே இஸ்ரவேலர்கள் பாபிலோனிற்கு அடிமைகளாக ஒப்புக்கொடுக்கப்பட்டனர். **(நெகே. 13:18)**
26. எருசலேம் தேவனுடைய கற்பனைகளை மீறியதால் அதை தேவன் அழித்துப்போட்டார். **(எரே. 17:27)**
27. ஓய்வுநாளை ஆசரிக்கும் அனைத்து புறஜாதிகளுக்கும் விசேஷமான ஆசீர்வாதத்தை தேவன் வாக்களித்தார். **(ஏசா. 56:6, 7)**
28. இது முழுவதுமாக கிறிஸ்தவர்களுக்காகவே கொடுக்கப்பட்டதாகும். இதைத் தீர்க்கதரிசனத்திலும் காணமுடியும். **(ஏசாயா 56ஐ படிக்கவும்)**
29. ஓய்வுநாளை ஆசரிக்கக்கூடிய அனைவரையும் ஆசீர்வதிப்பேன் என தேவன் வாக்குரைத்திருக்கிறார். **(ஏசாயா 56:2)**
30. இதை "மகிமையுள்ள" நாளென்று நாம் சொல்லவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார். **(ஏசாயா 58:13)**. அல்லாமல், இதை "பாரம்பரிய யூதர்களுக்கான ஓய்வுநாள்" மற்றும் "அடிமையின் நுகத்தடி" என்று பலவாறு கூற விரும்புபவர்கள் கவனமாயிருக்கவேண்டும்.
31. "அநேகந் தலைமுறைகளுக்கு" இந்தப் பரிசுத்த ஓய்வுநாளானது காலின்கீழ் மிதிக்கப்பட்டிருக்க, இந்தக் கடைசிக் காலங்களில் இதை மீண்டும் கருத்தாய் ஆசரிக்கப்படவேண்டும். **(ஏசா. 58:12, 13)**
32. அனைத்து பரிசுத்த தீர்க்கதரிசிகளும் இந்த ஏழாம் நாளை ஆசரித்தனர்.
33. தேவக்குமாரன் பூமிக்கு வந்தபோது அவரது வாழ்நாள் முழுவதும் ஓய்வுநாளை ஆசரித்தார். **(லூக் 4:16; யோவான் 15:10)**. இவ்வாறு அவர் சிருஷ்டிப்பில் தனது பிதாவின் எடுத்துக்காட்டை பின்பற்றினார். பிதா மற்றும் குமாரனுடைய உதாரணத்தைப் பின்பற்றுவதில் நாமும்கூட கவனமாயிருப்போமா?
34. ஏழாம் நாளே தேவனாகிய கர்த்தருடைய நாள். **(வெளி. 1:10; மாற்கு 2:28; ஏசாயா 58:13; யாத். 20:10ஐ படிக்கவும்)**

35. இயேசு ஓய்வுநாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார் (**மாற்கு 2:28**). அதாவது புருஷன் தன் மனைவிக்கு ஆண்டவனாயிருந்து அவளை நேசித்து பாதுகாப்பதுபோல, அவரும் ஓய்வுநாளை நேசித்து பாதுகாக்கிறார். (**1பேதுரு. 3:6**)

36. மனிதனுடைய நன்மைக்காக ஓய்வுநாள் என்ற இந்த இரக்கமான அமைப்பை நிலைநாட்டியிருக்கிறார். (**மாற்கு 2:23-28**)

37. ஓய்வுநாளை ஒழிப்பதற்கு பதிலாக, அதை எவ்வாறு ஆசரிப்பதென்று கவனமாக கற்றுக்கொடுத்தார். (**மத். 12:1-13**)

38. ஓய்வுநாளில் "நன்மை" செய்வது நியாயந்தான் என்பதைக் கற்றுக்கொடுத்தார். (**மத்தேயு 12:12**)

39. அவர் உயிர்த்தெழுந்து நாற்பது வருடங்கள் கழித்தும் ஓய்வுநாள் எவ்வாறு ஜெபத்தோடு ஆசரிக்கப்படவேண்டுமென்பதை அறிவுறுத்தினார். (**மத். 24:20**)

40. அவரோடிருந்த தேவபக்தியுள்ள ஸ்திரிகள் அவருடைய மரணத்திற்குப் பின்னும் ஓய்வுநாளை கவனமாகக் கைக்கொண்டனர். (**லூக் 23:56**)

41. கிறிஸ்து உயிர்த்தெழுந்து முப்பது வருடங்களுக்குப் பிறகு, ஆவியானவர் ஏழாம் நாளை "ஓய்வுநாள்" என்று அழைக்கிறார். (**அப். 13:14**)

42. புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாக அனுப்பப்பட்ட பவுல் கி.பி. 45ல் ஏழாம் நாளை "ஓய்வுநாள்" என்றே அழைக்கிறார். (**அப். 13:27**) ஓய்வுநாளானது கிறிஸ்து உயிர்த்மெழுந்தபிறகு மாற்றப்பட்டாயிற்று என இக்காலத்து போதகர்கள் கூறுகிறார்கள். இது பவுலுக்கு தெரியாதா?

43. தேவ ஆவியினால் ஏவப்பட்ட கிறிஸ்தவ வரலாற்றாசிரியரான லூக்காவும் கி.பி. 62ல் அந்நாளை "ஓய்வுநாள்" என்றே அழைக்கிறார். (**அப். 13:44**)

44. புறஜாதியிலிருந்து மனம்மாறிய கிறிஸ்தவர்களும் அதை ஓய்வுநாள் என்றே அழைத்தனர். (**அப். 13:42**)

45. மாபெரும் கிறிஸ்தவ சங்கத்தில், கி.பி. 49ல் அப்போஸ்தலர்களுக்கு முன்பாகவும், ஆயிரக்கணக்கான சீஷர்களுக்கு முன்பாகவும் யாக்கோபு அந்நாளை "ஓய்வுநாள்" என்றே அழைக்கிறார். (**அப். 15:21**)

46. ஓய்வுநாளில் ஜெபக்கூட்டங்கள் நடத்துவது அந்நாட்களில் வழக்கமாக இருந்தது. (**அப். 16:13**)

47. ஓய்வுநாளில் நடைபெற்ற பொதுஜெபக்கூட்டங்களில் பவுல் வேதவசனங்களை வாசித்தார். (**அப். 17:2, 3**)

48. ஓய்வுநாளில் பிரசங்கம் செய்வது அவருடைய வழக்கமாயிருந்தது. (**அப். 17:2, 3**)

49. அப்போஸ்தலர் புத்தகத்தில் மட்டும், ஓய்வுநாளில் 84 கூட்டங்கள் நடைபெற்றதாக வேதாகமப் பதிவுகள் கூறுகின்றன. (**அப். 13:14, 44; 16:13; 17:2; 18:4, 11**)

50. கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் ஓய்வுநாள் குறித்து எந்த ஒரு சண்டைகளும் ஏற்பட்டதில்லை. கிறிஸ்தவர்களும் யூதர்களும் ஒரே நாளைத்தான் ஓய்வுநாளாக ஆசரித்தனர் என்பதற்கு இதுவே ஒரு மிகப்பெரிய சான்றாகும்.

51. பவுல் வேறு நாளை ஓய்வுநாளாக ஆசரித்திருந்திருப்பார் என்றால், யூதர்கள் பவுலின்மேல் வைத்த குற்றச்சாட்டுகள் ஒன்றிலாகிலும் அவர் ஓய்வுநாளை மீறியதாகக் குற்றஞ்சாட்டியிருந்திருக்கவேண்டும்.

52. ஆனால் பவுலோ வெளிப்படையாக தான் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டதாகக் கூறுகிறார். "...நான் யூதருடைய வேதப்பிரமாணத்துக்காகிலும், தேவாலயத்துக்காகிலும், இராயருக்காகிலும் விரோதமாக ஒரு குற்றமும் செய்யவில்லையென்று சொன்னான்" **அப். 25:8** அவர் ஓய்வு நாளை உண்மையாகவே ஆசரிக்கவில்லையென்றால் அவரால் இப்படி எவ்வாறு கூறமுடியும்?

53. புதிய ஏற்பாட்டில் "ஓய்வுநாள்" என்ற வார்த்தை மொத்தம் 59 முறை வருகிறது. பழைய ஏற்பாட்டில் எத்தகைய மதிப்போடு இவ்வார்த்தைக் கூறப்பட்டுள்ளதோ, அதே விதமாகத்தான் புதிய ஏற்பாட்டிலும் உபயோகிக்கப்பட்டுள்ளது.

54. புதிய ஏற்பாட்டின் எந்த இடத்திலும் ஓய்வுநாள் ஒழிந்துபோனது, மாற்றப்பட்டது என்று எங்கேயும் நாம் காணமுடியாது.

55. ஓய்வுநாளில் எந்த மனிதனுக்கும் வேலை செய்வதற்கு தேவன் அனுமதிக்கவில்லை. இதைப் படிக்கும் அன்பான தேவனுடைய பிள்ளையே மற்ற நாளில் நாம் வேலை பார்ப்பதுபோல, எந்த அதிகாரத்துடன் ஓய்வுநாளை ஒரு சாதாரண நாளாகப் பார்க்கிறீர்கள்?

56. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு முன்னும் பின்னும் எந்த ஒரு கிறிஸ்தவனும் ஓய்வுநாளில் வேலை செய்யவில்லை. இதற்கு ஒரே ஒரு ஆதாரத்தையாவது உங்களால் கொடுக்கமுடியுமா? இருந்தால் சொல்லுங்கள், அதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் இக்காலத்து நவநாகரீகக் கிறிஸ்தவர்கள் மட்டும் வேதாகமக் கிறிஸ்தவர்களுக்கு முரண்பட்டுக் காணப்படுவது ஏன்?

57. ஏழாம் நாள் ஓய்வுநாளிலிருந்து பரிசுத்தத்தையும் ஆசீர்வாதத்தையும் தேவன் எடுத்துவிட்டார் என்று வேதத்தில் எந்த ஒரு பதிவும் இல்லை.

58. விழுகைக்குமுன் ஏதேனில் எவ்வாறு கைக்கொள்ளப்பட்டதோ, அவ்வாறே புதிய பூமியில் நித்திய நித்தியமாக ஆசரிக்கப்படும் என்று வேதத்தில் வாசிக்கிறோம். (**ஏசாயா 66:22, 23**)

59. தேவனுடைய வாயால் பேசப்பட்டு, சொந்த விரலினால் எழுதப்பட்ட ஏழாம் நாள் ஓய்வுநாள் தேவனுடைய பிரமாணத்தின் முக்கியமானப் பகுதியாகும். (யாத். 20ஐ படிக்கவும்) இயேசு தன்னுடைய ஊழியத்தைத் துவங்கியபோது தான் நியாயப்பிரமாணங்களை ஒழிக்கிறதற்காக வரவில்லை என்பதை தெளிவாகக் கூறினார். "நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்..." **மத்தேயு 5:17.**

60. தேவனை நேசிப்பதைப் போல் மாய்மாலம் செய்த பரிசேயர்களை இயேசு கடுமையாகக் கண்டித்தார். அதே வேளையில், அவர்களுடைய பாரம்பரியத்தால் அவர்கள் பத்து கற்பனைகளில் ஒன்றை அவமாக்கினார்கள். வாரத்தின் முதலாம் நாளாகிய ஓய்வுநாளை ஆசரிப்பதும் மனிதர்களின் பாரம்பரியமேயாகும்.

## வாரத்தின் முதலாம் நாளைக் குறித்த 40 வேதாகம உண்மைகள்

1. வேதாகமத்தில், முதன்முதலில் ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்ததாகப் பதிவிடப்பட்டுள்ளது. (**ஆதி. 1:1-5**). சிருஷ்டிகரே அந்த வேலையில் ஈடுபட்டிருந்தார். தேவனே பூமியை ஞாயிற்றுக்கிழமையில் உண்டாக்கினார் என்றால் அதே நாளில் நாமும் வேலை செய்வது எப்படி தவறாகும்?

2. வாரத்தின் முதலாம் நாளில் வேலை செய்யும்படி தேவன் நமக்கு கட்டளையிட்டுள்ளார். (**யாத். 20:8-11**). தேவனுக்கு கீழ்ப்படிவது தவறான காரியமா?

3. நமது முற்பிதாக்களில் ஒருவர்கூட அந்த நாளை ஆசரித்ததில்லை.

4. நமது பரிசுத்த தீர்க்கதரிசிகளும் அந்த நாளை ஆசரித்ததில்லை.

5. தேவனுடைய கட்டளையின்பேரில், அவருடைய பரிசுத்த ஜனம் வாரத்தின் முதலாம் நாளை பொதுவான வேலை நாளாகவே கிட்டத்தட்ட 4000 ஆண்டுகளாய் அனுசரித்து வந்தனர்.

6. தேவனே அந்த நாளை “வேலை நாள்” என்றுதான் அழைக்கிறார். **(எசே. 46:1)**

7. தேவன் அந்த நாளில் ஓய்ந்திருக்கவில்லை.

8. தேவன் அந்த நாளை ஆசீர்வதிக்கவில்லை.

9. கிறிஸ்து அந்நாளில் ஓய்வெடுக்கவில்லை.

10. இயேசு ஒரு தச்சராக இருந்தார் **(மாற்கு 6:3)**. மேலும் அவர் தனது முப்பதாம் வயது வரைக்கும் அத்தொழிலை செய்துவந்தார். அனைவரும் ஒப்புக்கொள்கிறபடியே, அவர் ஆறு நாளும் வேலை செய்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். இவ்வாறு அவர் மிகவும் கடினமான வேலைகளை ஞாயிற்றுக்கிழமையில் செய்தார்.

11. அதே காலத்தில், அப்போஸ்தலர்களும் ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்தனர்.

12. அப்போஸ்தலர்கள் அந்த நாளில் ஒருபோதும் ஓய்ந்திருக்கவில்லை.

13. அந்த நாளை கிறிஸ்து ஒருபோதும் ஆசீர்வதிக்கவில்லை.

14. எந்த ஒரு தெய்வீக அதிகாரத்தினாலும் அந்நாள் ஆசீர்வதிக்கப்படவில்லை.

15. அந்த நாள் ஒருபோதும் பரிசுத்தமாக்கப்படவில்லை.

16. அந்த நாளை ஆசரிக்கவேண்டுமென்று எந்த ஒரு கட்டளையும் கொடுக்கப்படவில்லை. எனவே, அந்த நாளில் வேலை செய்வது பிரமாணத்தை மீறுவதாகாது. ஏனெனில், “நியாயப்பிரமாணமில்லை என்றால் மீறுதலும் இல்லை.” **(ரோமர் 4:15)** (**1யோவான் 3:4ஐயும் படிக்கவும்**).

17. அந்நாளில் வேலை செய்யக்கூடாதென்று புதிய ஏற்பாட்டில் எங்கேயும் கட்டளை கொடுக்கப்படவில்லை.

18. அதை மீறினால் தண்டனை ஏதுமில்லை.

19. அந்நாளை ஆசரிப்பதினால் எந்த ஒரு ஆசீர்வாதமும் வாக்களிக்கப்படவில்லை.

20. அந்த நாளை எவ்வாறு ஆசரிப்பதென்று எந்த ஒரு முறைமையும் கொடுக்கப்படவில்லை. கொடுக்கப்பட்டிருந்தால் தேவன் நம்மை கைக்கொள்ளும்படி கூறியிருப்பார்.

21. அது ஒருபோதும் கிறிஸ்தவர்களின் ஓய்வுநாள் என்று அழைக்கப்படவில்லை.

22. அது ஓய்வுநாள் என்றே அழைக்கப்படவில்லை.

23. அது தேவனுடைய நாள் என்றும் அழைக்கப்படவில்லை.

24. அது ஓய்ந்திருக்கும் நாள் என்றும் அழைக்கப்படவில்லை.

25. எந்த ஒரு பரிசுத்தமான பெயரும் அதற்கு வழங்கப்படாமலிருக்க, அதை ஏன் நாம் பரிசுத்தநாள் என்று அழைக்கவேண்டும்?

26. அது வெறும் “வாரத்தின் முதல் நாள்” என்றே அழைக்கப்படுகிறது.

27. வேதாகப் பதிவின்படி, இயேசு அதை எங்கேயும் குறிப்பிடவில்லை, அவருடைய வாயால் எங்கும் அதைக்குறித்து பேசவில்லை.

28. ஞாயிறு என்ற வார்த்தை வேதாகமத்தில் இல்லை.

29. தேவனோ, கிறிஸ்துவோ, பரிசுத்த மனிதர்களோ ஞாயிற்றுக்கிழமை பரிசுத்தமான நாள் என்றும், அதற்கு இசைவாகவும் எங்கேயும் கூறவில்லை.

30. புதிய ஏற்பாடு முழுவதிலும் வாரத்தின் முதலாம் நாள் என்ற வார்த்தை வெறும் எட்டு முறை மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. (**மத். 28:1; மாற்கு 16:2, 9; லூக்கா 24:1; யோவான் 20:1, 19; அப். 20:7; 1 கொரி. 16:2**).

31. இந்த எட்டு வசனங்களில் ஆறு வசனங்கள் வாரத்தின் முதலாம் நாளையே குறிப்பிடுகின்றன.

32. பரிசுத்தவான்கள் அந்த நாளில் தங்கள் வேலை அலுவல்களைப் பார்க்குமாறு பவுல் அறிவுறுத்தினார். (**1கொரி. 16:2**)

33. புதிய ஏற்பாடு முழுவதிலும் ஒரே ஒரு ஆவிக்குரிய கூட்டம் மட்டுமே இந்த நாளில் நடந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவும் இரவில் நடந்த கூட்டமாகும். **(அப். 20:5-12)**

34. இதற்கு முன்போ பின்போ எந்த ஒரு கூட்டமும் நடந்ததாக எந்த ஒரு தகவலும் இல்லை.

35. அந்நாளில் கூடுவது அவர்களுடைய வழக்கமுமல்ல.

36. அந்நாளில் அப்பம் பிடுவதும் அவர்களுக்கு தேவையில்லாதிருந்தது.

37. அவ்வாறு அப்பம் பிட்ட ஒரே ஒரு அனுபவம் மட்டுமே வேதத்தில் பதிவிடப்பட்டுள்ளது. **(அப் 20:7)**

38. அதுவும் நடுராத்திரிக்குப் பிறகே அக்கூட்டம் நடந்தது **(வச. 7-11)** இயேசு அதை வியாழன் மாலையில் கொண்டாடினார் **(லூக் 22)**. சீஷர்களோ அதை அனுதினமும் செய்தனர் **(அப். 2:42-46)**.

39. ஞானஸ்தானம் என்பது இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை நினைவுச்சின்னமாகக் கொண்டுள்ளது **(ரோமர் 6:3-5)**. ஆனால் இயேசுவின் உயிர்த்தெழுதலின் அடையாளமாக வாரத்தின் முதலாம் நாளில் ஓய்வெடுக்கவேண்டும் என்று வேதத்தில் எந்த இடத்திலும் கூறப்படவில்லை. இது முழுவதுமாக தேவனுடைய கற்பனையை அவமாக்கும் மனிதனுடைய பாரம்பரியமேயன்றி வேறல்ல. **(மத். 15:1-9)**

40. இறுதியாக, ஓய்வுநாள் மாற்றத்தைக் குறித்தோ அல்லது வாரத்தின் முதலாம் நாள் பரிசுத்தமாக்கப்பட்டது என்பதைக் குறித்து புதிய ஏற்பாடு அமைதியாகவே இருக்கிறது.

பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் ஏழாம் நாள் ஓய்வுநாளே தேவனுடைய நாள் என்பதை அறிவிக்க இங்கே 100 வெளிப்படையான வேதாகம உண்மைகள் உள்ளன.

1885ம் ஆண்டு ரிவ்யூ அண்ட் ஹெரால்ட் பதிப்பக சங்கத்திலிருந்து அச்சிடப்பட்ட கைப்பிரதியிலிருந்து மீண்டும் அச்சிடப்பட்டதாகும்.

இணையான பத்திரிக்கைகள்

- ஏழாம் நாளைக் குறித்த 7 உண்மைகள்
- ஓய்வுநாள் யூதர்களுக்கு மட்டும் உரியதல்ல என்பதற்கான 10 காரணங்கள்
- ஓய்வுநாள் குறித்த சான்றுகள்

**www.sabbathTruth.com -** லிருந்து அச்சிடப்பட்டதாகும்

ஒவ்வொரு புதன்கிழமையும்
மாலை 6:30 மணிக்கு,
போதகர் டக் உடன் சேர்ந்து
தேவனுடைய வார்த்தையைப் படிக்க
வாருங்கள்!

NAMBIKKAI TELEVISION

AMAZING FACTS India

+91 73370 68620

www.AmazingFactsIndia.org • TamilBibleSchool@AFTV.in
©2020 Amazing Facts, Intl. All Rights Reserved. Printed in India.